சார்பு நீதிமன்றம், விருதுநகர்

M.C.O.P.No: 91/2020 Date: 08.08.2024.

எதிர்மனுதாரரின் தரப்பு சாட்சி–2(Rw2) வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹரிஹரன் | சாதி | : | -- |
| த/பெ | : | சுவாமிநாதன் | சமயம் | : | -- |
| கிராமம் | : | மகாத்மாகாந்தி நகர் | தொழில் | : | |
| தாலுகா | : | மதுரை | வயது | : | 34 |

<u>முதல் விசாரணை –</u>

நான் தற்போது திருமங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். கள்ளிக்குடி தாலுகா, திருமங்கலம் வட்டார போக்குவரத்து அலுவலரின் அதிகார எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். சக்திவேல் த/பெ.கருணாநிதி கதவு எண்.3/117, வடக்கு தெரு, குராயூர் கிராமம், பேய்க்குளம் போஸ்ட்.. கள்ளிக்குடி தாலுகா, மதுரை மாவட்டம் என்பவருக்கு கடந்த 11.10.2019ம் தேதியன்று இருசக்கர வாகனத்தை ஓட்டி செல்வதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் கணினி பதிவேட்டில் தேடிப்பார்த்ததில் அவ்வாறு வழங்கப்பட்டதாக தெரியவில்லை. எங்கள் அலுவலகத்தில் அவ்வாறு

வழங்கப்படவில்லை என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது **எ.ம.சா.ஆ.2** ஆகும். ஒருவர் ஓட்டுநர் உரிமம் விண்ணப்பிக்க விரும்பினால் அவருடைய ஆதார் முகவரி உள்ள பகுதியில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் விண்ணப்பிக்க முடியும் என்றால் சரிதான்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

வேறொரு முகவரிக்கு மாறும் போது ஆதார் அட்டை முகவரியை மாற்றம் செய்ய வாய்ப்புள்ளது. வேறொரு முகவரியில் இருந்து வந்து அந்த முகவரியில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றால் அந்த ஆவண குறிப்புகளோ எங்கள் அலுவலக கணினியில் வராது என்றால் சரிதான்.